## October 23 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க தகவல் தொழில்நுட்ப விதிமுறைகளை மேலும் கடுமையாக்கும் வகையில் திருத்தங்களை மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.
    i. இதுதொடர்பாக மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பில், 'பாதுகாப்பான இணைய சேவைகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்பதில் மத்திய அரசு மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு 2021-ஆம் ஆண்டின் தகவல் தொழில்நுட்ப விதிமுறைகளில் திருத்தங்களை மேற்கொள்ள மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் பரிந்து ரைத்துள்ளது.
    ii. அடையாள குறியீடு கட்டாயம்: இதன்படி செயற்கை நுண்ணறிவு மூலம் ஒளிப்பதிவுகள், காணொலிகள் உருவாக்கப்பட்டால், அதை சமூக ஊடக தளங்கள் (ஃபேஸ்புக், யூடியூப் உள்ளிட்ட தளங்கள்) கட்டாயம் குறிப்பிட வேண்டும். குறைந்தபட்சம் காணொலியின் 10 சதவீத காட்சியில் அந்த அடையாள குறியீடு இடம்பெறுவதை சமூக ஊடக தளங்கள் உறுதி செய்ய வேண்டும். இதுவே ஒலிப்பதிவாக இருந்தால், 10 சதவீத ஒலிப்பதிவில் அந்தக் குறியீடு இடம் பெற வேண்டும். ஒலிப்பதிவின் தொடக்கத்திலேயே அந்தக் குறியீடு இடம்பெறுவது கட்டாயம்.
    iii. சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்யப்படும் தகவல்கள் செயற்கையாக உருவாக்கப்பட்டதா என்பதை உறுதி செய்ய, அதைப் பதிவேற்றும் பயனரிடம் இருந்து சமூக ஊடக தளங்கள் உறுதிமொழி பெறவேண்டும். அந்தக் குறியீடுகளை அகற்ற இந்த விதிமுறைகள் தடை விதிக்கிறது.
    iv. சட்டவிரோத தகவல்களை நீக்க டிஜிபி, இணைச் செயலர் அந்தஸ்தில் இருப்பவர்களால் மட்டுமே உத்தரவிட முடியும். இந்த உத்தரவுகளின் செயலாக்கம் குறித்து மாதந்தோறும் செயலாளர் அந்தஸ்திலான அதிகாரி கூட்டம் நடத்தி ஆய்வு நடத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. ஒடுக்கப்பட்டோர் நலனுக்காகப் பாடுபட்டு வருவோருக்கு வழங்கப்படும் தமிழக அரசின் வைக்கம் விருதுக்கு, அமெரிக்காவைச் சேர்ந்த தேன்மொழி சௌந்தரராஜன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
    i. பிற மாநிலங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நலனுக்காகப் பாடுபட்டு குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகளுக்காக ஆண்டுதோறும் வைக்கம் விருது வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், நிகழாண்டுக்கான வைக்கம் விருதுக்கு அமெரிக்காவின் கலிபோர்னியாவைச் சேர்ந்த தேன்மொழி சௌந்தரராஜன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவர் அமெரிக்க ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமை ஆர்வலர் மற்றும் எழுத்தாளர் ஆவார்.
    ii. அமெரிக்காவிலும், உலக அளவிலும் ஜாதியால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரம் அளிக்கும் சிவில் உரிமைகள் அமைப்பான ஈக்வாலிட்டி லேப்ஸின் நிறுவனராக உள்ளார்.
    iii. வைக்கம் விருதானது, ரூ.5 லட்சத்துக்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் தங்க முலாம் பூசிய பதக்கம் ஆகியன அடங்கியதாகும்.
3. ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற இந்தியாவின் ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ராவுக்கு தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்திய ராணுவத்தின் கௌரவ லெப்டினன்ட் கர்னல் பதவியை வழங்கி கௌரவித்த பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ராணுவ தலைமைத் தளபதி உபேந்திர திவிவேதி.

4. இத்தாலியில் அடுத்த ஆண்டு பிப்ரவரியில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் தீப ஓட்டத்தில் பங்கேற்க, இந்திய துப்பாக்கி சுடுதல் வீரரும், ஒலிம்பிக் தங்கம் வென்றவருமான அபினவ் பிந்த்ரா தேர்வாகியிருக்கிறார்.
5. தென் அமெரிக்க நாடான பெருவில் நடந்துவரும் அரசுக்கு எதிரான போராட்டங்களைக் கட்டுப்படுத்த, தலைநகர் லீமா மற்றும் அருகிலுள்ள கல்லாவ் துறைமுகத்தில் இடைக்கால அதிபர் ஜோஸ் ஜெரி அவசரநிலையை அறிவித்துள்ளார்.
   - i. இதுகுறித்து அரசுத் தொலைக்காட்சியில் அவர் வெளியிட்ட உரையில், புதன்கிழமை நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் இந்த அவசரநிலை 30 நாள்களுக்கு நீடிக்கும் என்றார்.
   - ii. ஊழல் மற்றும் அமைப்புசார் குற்றக்கும்பல்களுக்கு எதிராக பெருவில் பல வாரங்களாக போராட்டங்கள் நடந்ததைத் தொடர்ந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் டினா போலுவார்த்தேவை நாடாளுமன்றம் பதவி நீக்கம் செய்தது. அதைத் தொடர்ந்து, இடைக்கால அதிபராக ஜோஸ் ஜெரி நியமிக்கப்பட்டார்.
   - iii. இருந்தாலும் வன்முறை பேராட்டம் ஓயாததால், சட்டம், ஒழுங்கை மீட்க அவர் தற்போது அவசரநிலை அறிவித்துள்ளார்.
6. இந்தியாவின் மொத்த வனப்பரப்பு உலக அளவில் 9-ஆவது இடத்துக்கு உயர்ந்துள்ளது. மேலும், வனப்பரப்பின் வருடாந்திர அதிகரிப்பில் இந்தியா தொடர்ந்து 3-ஆவது இடத்தைத் தக்கவைத்துள்ளது.
   - i. ஐ.நா. சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (எஃப்ஏஓ) வெளியிட்டுள்ள புதிய அறிக்கையின்படி இத்தகவல் வெளியாகியுள்ளது.
   - ii. ஐ.நா. அறிக்கைப்படி, உலகின் மொத்த வனப்பரப்பு 414 கோடி ஹெக்டேர் ஆகும். இதில் ரஷியா, பிரேஸில், கனடா, அமெரிக்கா, சீனா ஆகிய ஐந்து நாடுகளில் மட்டும் பாதிக்கும் மேற்பட்டவனப் பரப்பைக் (54 சதவீதம்) கொண்டுள்ளன. ஆஸ்திரேலியா, காங்கோ குடியரசு, இந்தோனேசியா ஆகிய நாடுளதுகளைத் தொடர்ந்து இந்தியா 9- ஆவது இடத்தில் உள்ளது.
   - iii. கடந்த 2015 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில் வனப்பரப்பின் வருடாந்திர அதிகரிப்பில், சீனா அதிகபட்சமாக 16.9 லட்சம் ஹெக்டேருடன் முதலிடத்திலும், ரஷியா 9.42 லட்சம் ஹெக்டேருடன் இரண்டாம் இடத்திலும், இந்தியா 1.91 லட்சம் ஹெக்டேருடன் மூன்றாம் இடத்திலும் உள்ளன.
   - iv. இதற்கடுத்து துருக்கி (1.18 லட்சம் ஹெக்டேர்), ஆஸ்திரேலியா (1.05 லட்சம் ஹெக்டேர்), பிரான்ஸ் (95,900 ஹெக்டேர்), இந்தோனேசியா (94,100 ஹெக்டேர்), தென்னாப்பிரிக்கா (87,600 ஹெக்டேர்), கனடா (82,500 ஹெக்டேர்), வியத்நாம் (72,800 ஹெக்டேர்) உள்ளிட்ட நாடுகள் வனப்பரப்பில் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் கண்டுள்ளன.
   - v. ஆசியாவின் முக்கியப் பங்கு: உலக அளவில், வன இழப்பின் ஆண்டு விகிதம், 1990-களில் 1.07 கோடி ஹெக்டேரில் இருந்து தற்போது 41.2 லட்சம் ஹெக்டேராகக் குறைக்கப்பட்டுள்ளது. உலக வன அழிப்பு நடவடிக்கையைக் குறைப் பதில் ஆசிய கண்டத்தின் வன விரிவாக்கம் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அறிக்கை சுட்டிக்காட்டியுள் 1990-2025 காலகட்டத்தில் ஆசிய கண்டம் மட்டுமே வனப்பரப்பில் அதிகரிப்பைப் பதிவு செய்த ஒரே பிராந்தியமாகும்.
   - vi. பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசின் காடு வளர்ப்பு மற்றும் சமுதாயத்தை மையமாகக் கொண்ட வனப்பாதுகாப்பு முயற்சிகளின் வெற்றி, இந்தியாவின் இந்தச் சாதனைக்கு முக்கியக் காரணமாகும் என்று மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் பெருமிதத்துடன் தெரிவித்துள்ளது.

7. வெள்ளை மாளிகையில் நடைபெற்ற தீபாவளி கொண்டாட்டத்தில், அமெரிக்காவுக்கான இந்திய தூதர் வினய் மோகன் குவாத்ரா, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 'எஃப்.பி.ஐ.' இயக்குநர் காஷ் படேல் மற்றும் ‘அடோப்' நிறுவன தலைமைச் செயல் அதிகாரி (சிஇஓ) சாந்தனு நாராயண், 'மைக் ரோன் டெக்னாலஜி' சிஇஓ சஞ்சய் மெஹ்ரோத்ரா, 'ஐ.பி.எம்.' சிஇஓ அரவிந்த் கிருஷ்ணா உள்ளிட்ட முக்கிய வணிகத் தலைவர்கள் பங்கேற்றனர்.
8. உலகளாவிய வர்த்தக சவால்களுக்கு எதிராக தெற்குலகம் ஒன்றிணைந்து குரல் எழுப்ப வேண்டும் என்று ஐ.நா. மாநாட்டில் மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் வலியுறுத்தினார்.
    i. இது தொடர்பாக ஸ்விட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்ற ஐ.நா. வின் வர்த்தக மேம்பாட்டு மாநாட்டில் அவர் புதன்கிழமை பேசியதாவது: உலகளாவிய வர்த்தக முறையில் உள்ள தெளிவின்மை, சவால்கள், நிச்சயமற்ற சூழல்கள் காரணமாக தற்போது உலகம் ஏற்ற- இறக்கம் கொண்டதாக உள்ளது.
    ii. வரி விதிப்பு இடையூறுகள், ஒருதலைப்பட்சமான சுற்றுச்சூழல் கட்டுப்பாடுகள், சேவைகள் துறையில் உள்ள தடைகள் உள்ளிட்டவை அனைவர் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் நிலையில், அவற்றால் ஏற்படும் உலகளாவிய வர்த்தக சவால்களுக்கு எதிராக தெற்குலகம் ஒன்றிணைந்து குரல் எழுப்ப வேண்டும்.
    iii. இந்தச் சவால்கள் குறைவாக வளர்ந்துள்ள நாடுகள், வளர்ந்து வரும் நாடுகளைப் பெரிதும் பாதிக்கின்றன. ஏனெனில் அந்த நாடுகள் வளர்ச்சியை எதிர் நோக்கியுள்ளன. அதற்கான செயல்திட்டம் அந்த நாடுகளிடம் உள்ளன. எனவே நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடையவும், சவால்களை எதிர்கொள்ளவும் தெற்குலக நாடுகள் தம்மை புதுப்பித்து, புதிய வழியைக் கண்டறிய வேண்டும் என்றார்.